- முகப்பு
- இந்தியா
- உலகம்
- கல்வி
- தமிழ்
- தமிழ் நாடு
- நாம்
- விளையாட்டு
- முக்கிய நிகழ்வுகள்

# உலகின் முக்கிய நிகழ்வுகள்!

உண்மை நிகழ்வுகளை! வெளிஉலகிற்கு உணர்த்தும் ஒரு முயற்சி !

மே 19, 2009

## பிரபாகரன் நலமாக இருக்கிறார்: செ.பத்மநாதன்

Posted by seidhigal under அரசியல், இலங்கை, உலகம், செய்திகள் | குறிச்சொற்கள்: செ.பத்மநாதன், நலமாக இருக்கிறார், விடுதலைப் புலி, வேலுப்பிள்ளை பிரபாகரன் |
1 Comment

Rate This



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பாதுகாப்பாகவும், நலமாகவும் இருப்பதாக அந்த இயக்கத்தின் அனைத்துலக விவகாரங்களுக்கான பொறுப்பாளர் செல்வராஜா பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக தமது இயக்கத்தின் பல மூத்த உறுப்பினர்கள் சிறிலங்கப் படையினரால் வஞ்சகத்தனமாகக் கொல்லப்பட்டிருக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக ‘தமிழ்நெட்’ இணையத்தளத்துக்கு வழங்கியுள்ள பேட்டியில் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளதாவது:

இந்தப் போரில் வெற்றி பெற்றிருப்பதாக சிறிலங்க அரசாங்கம் பிரகடனப்படுத்தி இருக்கிறது. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டதாகவும் அறிவித்திருக்கிறது. இந்தப் போரில் உண்மையிலேயே சிறிலங்க வெற்றி பெற்றுள்ளதா?

**சிறிலங்கா அரசாங்கம் நிரூபிக்க முடியாத ஒரு உரிமை கோரலை வெளியிட்டிருக்கிறது. எமது தேசியத் தலைவர் உயிருடனும், நலமாகவும் உள்ளார் என்பதை மட்டும் என்னால் நிச்சயமாகக் கூற முடியும்.**

ஆனால், எமது அமைப்பின் பல மூத்த உறுப்பினர்களும் தலைவர்களும் உயிழந்திருக்கின்றனர் அல்லது துரோகத்தனமாகக் கொல்லப்பட்டுள்ளனர் என்பது உண்மை. இது மிகவும் துரதிர்ஷ்டமானது. ஆனால், எமது மக்களுடைய விருப்பங்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படும் வரையில் எமது போராட்டம் தொடரும்.

சிறிலங்கா ராணுவம் தமக்கு ஒரு ராணுவ வெற்றி கிடைத்திருப்பதாகப் பிரகடனம் செய்யலாம். ஆனால் அது ஒரு வஞ்சகத்தனமான வெற்றி என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. தமிழ் மக்களுடைய நம்பிக்கையை இவர்கள் முற்றாகவே இழந்துவிட்டனர்.

தற்போதைய நிலைமைகளின் அடிப்படையில் பார்க்கும்போது விடுதலைப் புலிகளின் எதிர்காலம் எவ்வாறு அமையும்?

தமிழ்த் தேசியப் பிரச்சனைக்கு ராணுவ வழிமுறைகளில் அல்லாமல் ஒரு அரசியல் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளையே முன்னெடுக்க வேண்டும் என்பதை முந்தைய அறிக்கைகள் பலவற்றிலும் நாம் தெளிவாகத் தெரிவித்திருந்தோம்.

எமது மக்களுடைய உயிர்களைப் பாதுகாப்பதற்காகவே இந்த நிலைப்பாட்டை நாம் எடுத்தோம். தமிழ் மக்கள் மீது குண்டுகளை வீசியும், எறிகணைகளால் தாக்குதல் நடத்தியும் அவர்களைப் படுகொலை செய்வதற்கு சிறிலங்க அரசாங்கம் போரைப் பயன்படுத்துவதை தொடர்ந்தும் அனுமதிக்க நாம் விரும்பவில்லை.

இந்த விவகாரத்தில் தலையிட்டு தாக்குதலைத் தடுத்து நிறுத்துமாறு அனைத்துலக சமூகத்தை நாம் கேட்டுக்கொண்ட போதிலும், இதனை கருத்தில் கொள்ளாமல் தாக்குதல் நடவடிக்கையை தொடர்வதிலேயே சிறிலங்க அரசு குறியாக இருந்தது.

**எமக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி வெள்ளைக் கொடிகளை ஏந்தியவாறு சரணடைய முன்வந்த எமது போராளிகளும் தலைவர்களும் அனைத்துலக நடவடிக்கைகள் அனைத்தையும் மீறும் வகையில் ஈவிரக்கமற்ற முறையில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.**

இந்த விடயத்தில் ஒரு பலமான நிலைப்பாட்டை எடுத்து சிறிலங்க அரசாங்கத்தை இணங்கச் செய்வதற்கும் அனைத்துலக சமூகம் மறுத்துவிட்டது. இந்த நிகழ்வுகளையிட்டு நாம் மிகவும் வருந்துகின்றோம்.

ஆனால், இலங்கையில் உள்ள தமிழர்களின் எதிர்காலமும் தமிழ்த் தேசியப் பிரச்சனையும் தீர்வு எதுவும் இன்றி தொடர்ந்திருக்கப் போகிறது.

தமிழ்த் தேசியப் பிரச்சனைக்கான தீர்வை முன்னெடுப்பதற்கான தமது பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் அமைப்புக்கு தமது ஆணையை மக்கள் வழங்கியிருக்கின்றனர். இவ்வாறு மக்கள் எமக்கு அளித்துள்ள ஆணையின் அடிப்படையில் பொருத்தமான மாற்றுத் திட்டங்களையிட்டுப் பரிசீலனை செய்வதற்கு எமது அமைப்பு தயாராக இருக்கின்றது.

நீங்கள் அரசியல் தீர்வு ஒன்று தொடர்பாகப் பேசுகின்றீர்கள். ஆனால் கொழும்பு வெளிப்படுத்தும் உணர்வுகளும், தமிழ் மக்களுடைய விருப்பங்களைப் புரிந்து கொள்ளாதவாறு நாட்டின் ஏனைய பகுதிகளில் காணப்படும் மனநிலையும் இதற்கு ஏற்றதாக உள்ளதா?

சிங்கள மக்களிடம் இருந்து வெளிப்படும் உணர்வுகளும் அவர்களின் போக்கும் தூரதிர்ஷ்டமானதாகவே இருக்கின்றது. அந்த நாட்டில் தமிழர்கள் சம உரிமை கொண்ட குடிமக்களாக கருதப்பட்டால் அவர்கள் கௌரவத்துடன் நடத்தப்பட வேண்டும்.

ஆனால், அரசாங்கமும் அதன் ராணுவத்தினரும் பேரினவாதத்தை ஊக்குவிக்கும் வகையிலேயே தமது செயல்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இது, இனங்களுக்கு இடையேயான பிளவுகளை மேலும் அதிகப்படுத்துவதற்கே வழிவகுப்பதாக இருக்கும். பகை உணர்வுக்கு முடிவைக் கொண்டுவருவதற்கும் இது தடையாகவே இருக்கும்.

இது 'விடுதலைப் புலிகளுக்குப் பிற்பட்ட காலம்' எனப் பேசப்படுகின்றது. இந்த நிலையில் விடுதலைப் புலிகளால் மக்களை எவ்வாறு அணிதிரட்டி அதற்கான தலைமையை வழங்க முடியும்?

எமது தேசியப் பிரச்சனை ஆசியாவின் நீண்டகாலப் பிரச்சனைகளில் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. தற்போது உருவாகியிருக்கும் நிலைமைகளுக்கு இசைவாக எமது தந்திரோபாயங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது எமது தலைமைக்குத் தெரியும்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் விடுதலைப் புலிகளுக்குப் பின்னால் அணி திரண்டு தமது தீவிரமான ஆதரவை உலகம் முழுவதிலும் வெளிப்படுத்தியிருந்தமையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். வன்னியில் இடம்பெற்றுள்ள

www.tamilarangam.net

கொடூரம் தமிழர்களிடையேயான ஒற்றுமையை மேலும் பலப்படுத்தியிருக்கிறது.

இதனைத் தனித்து நின்று சாதிக்க முடியாது என்பது எமக்குத் தெரியும். தமிழர்களின் நலன்களையும், அவர்களுடைய எதிர்காலத்தையும் உறுதிப்படுத்துவதற்காக இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ தமிழர்கள் அல்லது தமிழ் அரசியல் கட்சிகள் மேற்கொள்ளக்கூடிய பங்களிப்பை நாம் வரவேற்கின்றோம்.

இதனை அடைவதற்காக இந்தியாவில் உள்ள தமிழ்க் கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்து செயல்படுவதற்கு நாம் விரும்புகின்றோம். தமிழர்களின் இந்த தேசியப் பிரச்சனையின் அடிப்படையில் பல தமிழ்க் கட்சிகள் முன்னர் ஆயுதம் ஏந்திய போராட்டத்தை மேற்கொண்டிருந்தன.

அவர்கள் அந்தக் கோட்பாடுகளுக்கு இப்போதும் கௌரவம் கொடுப்பார்கள் என நாம் நம்புகின்றோம். இந்த நிலையில் அதனை அடைவதற்கான இணைந்து செயல்படுவதற்கு அவர்கள் முன்வருவார்கள் என நாம் நம்புகின்றோம்.

### ஒரு பதில் to "பிரபாகரன் நலமாக இருக்கிறார்: செ.பத்மநாதன்"

1.  *பிரபாகரன் கொல்லப்பட்டதை விடுதலைப் புலிகள் சார்பாகப் பேசவல்லர் - பத்மநாதன் உறுதிப்படுத்திய* சொல்கிறார்:

   மே 25, 2009 at 2:41 மாலை     0   0 Rate This

   [...] [...]

   பதில்

### மறுமொழி இடுக

பெயர் (தேவையானவை)

மின்னஞ்சல் (தேவையானவை)

வலைத்தளம்

பின்னூட்டத்தை அனுப்புக

Notify me of follow-up comments via email.

புதுப்பதிவுகளை எனக்கு மின்னஞ்சல் மூலம் தெரியப்படுத்து

## தொகுக்கப்பட்ட வரவு

- **பதிவு நாள்:**